Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 418/2025** |
| Deposition of witness for | :: | **PW. 3** |
| Name | :: | **ராஜ்குமார் (சிறப்பு சார்பு ஆய்வாளர்)** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**
**02.06.2026**
**முதல் விசாரணை**:

1. நான் தற்போது பந்தல்குடி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியில் உள்ளேன். கடந்த 24.08.2025ம் தேதி 12.45 மணிக்கு பந்தல்குடி காவல் நிலைய சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த ஜோதிமுத்து அவர்களுடன் நான் மற்றும் தலைமை காவலர் பரமசிவம் ஆகியோர்கள் கிளம்பி பந்தல்குடி காவல் நிலைய சரக எல்லைக்குட்பட்ட பகுதியில் அனுமதியின்றி விற்கப்படும் மது மற்றும் சூதாட்டம் சம்மந்தமாக ரோந்து செய்து கண்காணித்து பந்தல்குடி பரமேஸ்வரி மில் குடியிருப்பு முன்பாக வந்தபோது சந்தேகத்திற்கு இடமான வகையில் கையில் சாக்குபையுடன் நின்றிருந்த நபர் எங்களை கண்டதும் கிளம்ப எத்தனித்தவரை நிறுத்தி விசாரிக்க அவரது பெயர் அய்யம்பிள்ளை என்று கூறினார். அவர் வைத்திருந்த சாக்கு பையை சோதனை செய்தபோது அந்த சாக்குபையில் சுமார் 180 மிலி அளவுள்ள EXPRESS Brandy – 18 மற்றும் 180 மிலி அளவுள்ள MONITOR Brandy bottle–16, 180 மிலி அளவுள்ள GOLDEN CHOICE Brandy bottle –2 ஆக மொத்தம் 31 பாட்டில்கள் இருந்தன.

2. மேற்படி பாட்டில்கள் பற்றி எதிரி அய்யம்பிள்ளையிடம் விசாரித்தபோது விற்பனைக்கு வைத்திருந்ததாக கூறினார். எந்தவொரு

அரசு அனுமதியும் உரிமமும் இல்லாமல் அதிக லாப நோக்கத்துடன் விற்பனை செய்வதற்காக வைத்திருந்த குற்றத்திற்காக மேற்படி அய்யம்பிள்ளையை 12.50 மணிக்கு கைதுக்கான காரணம் கூறி கைது செய்தும் மேற்படி மது பாட்டில்கள் மற்றும் சாக்கு பையை மதியம் 01.00 மணிக்கு சாட்சிகள் பாஸ்கரன், சிவசங்கரநடராஜ் மற்றும் போலீஸ் பார்ட்டிகள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினார். அதில் சாட்சிகள் பாஸ்கரன், சிவசங்கரநடராஜ், நான் மற்றும் தலைமை காவலர் பரமசிவம் ஆகியோர்கள் கையெழுத்து செய்தோம். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 4 வது கையெழுத்து என்னுடையது தான்.

**3.** பின்னர் சம்பவ இடத்திலிருந்து எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் பந்தல்குடி காவல் நிலையம் வந்து எதிரி அய்யம்பிள்ளை மீது நிலைய குற்ற எண். 113/2025 பிரிவுகள் 4(1)(C) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட நடவடிக்கைகளுக்கு நான் உதவியாக இருந்தேன். இது சம்மந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவத்தன்று நான் ரோந்து பணிக்கு சம்பவத்தன்று செல்லவில்லை என்றாலும் எதிரியிடமிருந்து எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும், அதனால் தான் எனக்கு முன்பு சாட்சியம் அளித்த அசா.1 எதிரியிடமிருந்து அவர் முன்பாக எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்று கூறியுள்ளார் என்றாலும் சரியல்ல. காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்ட அத்தாட்சியில் நான் கையொப்பம் செய்துவிட்டு தற்போது அதனை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் உயர் அதிகாரி கேட்டு கொண்டதற்கு இணங்க காவல் நிலைய கையிருப்பில் உள்ள மதுபாட்டில்களை நான் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 418/2025** |
| Deposition of witness for | :: | **PW. 2** |
| Name | :: | **பரமசிவம் (தலைமை காவலர்)** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**
**02.06.2026**
**முதல் விசாரணை**:

1. நான் தற்போது பந்தல்குடி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் உள்ளேன். கடந்த 24.08.2025 ம் தேதி 12.45 மணிக்கு பந்தல்குடி காவல் நிலைய சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த ஜோதிமுத்து அவர்களுடன் நான் மற்றும் சிறப்பு சார்பு ஆய்வாளர் ராஜ்குமார் ஆகியோர்கள் கிளம்பி பந்தல்குடி காவல் நிலைய சரக எல்லைக்குட்பட்ட பகுதியில் அனுமதியின்றி விற்கப்படும் மது மற்றும் சூதாட்டம் சம்மந்தமாக ரோந்து செய்து கண்காணித்து பந்தல்குடி பரமேஸ்வரி மில் குடியிருப்பு முன்பாக வந்தபோது சந்தேகத்திற்கு இடமான வகையில் கையில் சாக்குபையுடன் நின்றிருந்த நபர் எங்களை கண்டதும் கிளம்ப எத்தனித்தவரை நிறுத்தி விசாரிக்க அவரது பெயர் அய்யம்பிள்ளை என்று கூறினார். அவர் வைத்திருந்த சாக்கு பையை சோதனை செய்தபோது அந்த சாக்குபையில் சுமார் 180 மிலி அளவுள்ள EXPRESS Brandy – 13 மற்றும் 180 மிலி அளவுள்ள MONITOR Brandy bottle–16. 180 மிலி அளவுள்ள GOLDEN CHOICE Brandy bottle –2 ஆக மொத்தம் 31 பாட்டில்கள் இருந்தன.

2. மேற்படி மதுபாட்டில்கள் பற்றி எதிரி அய்யம்பிள்ளையிடம்

விசாரித்தபோது விற்பனைக்கு வைத்திருந்ததாக கூறினார். எந்தவொரு அரசு அனுமதியும் உரிமமும் இல்லாமல் அதிக லாப நோக்கத்துடன் விற்பனை செய்வதற்காக வைத்திருந்த குற்றத்திற்காக மேற்படி அய்யம்பிள்ளையை 12.50 மணிக்கு கைதுக்கான காரணம் கூறி கைது செய்தும் மேற்படி மது பாட்டில்கள் மற்றும் சாக்கு பையை மதியம் 01.00 மணிக்கு சாட்சிகள் பாஸ்கரன், சிவசங்கரநடராஜ் மற்றும் போலீஸ் பார்ட்டிகளாகிய முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினார். அதில் சாட்சிகள் பாஸ்கரன், சிவசங்கரநடராஜ், நான் மற்றும் சிறப்பு சார்பு ஆய்வாளர் ராஜ்குமார் ஆகியோர்கள் கையெழுத்து செய்தோம். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 3 வது கையெழுத்து என்னுடையது தான். **(அத்தாட்சி அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**3.** பின்னர் சம்பவ இடத்திலிருந்து எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் பந்தல்குடி காவல் நிலையம் வந்து எதிரி அய்யம்பிள்ளை மீது நிலைய குற்ற எண். 113/2025 பிரிவுகள் 4(1)(C) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட நடவடிக்கைகளுக்கு நான் உதவியாக இருந்தேன். இது சம்மந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவத்தன்று நான் ரோந்து பணிக்கு சம்பவத்தன்று செல்லவில்லை என்றாலும் எதிரியிடமிருந்து எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும், அதனால் தான் எனக்கு முன்பு சாட்சியம் அளித்த அசா.1 எதிரியிடமிருந்து அவர் முன்பாக எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்று கூறியுள்ளார் என்றாலும் சரியல்ல. காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்ட அத்தாட்சியில் நான் கையொப்பம் செய்துவிட்டு தற்போது அதனை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் உயர் அதிகாரி கேட்டு கொண்டதற்கு இணங்க காவல் நிலைய கையிருப்பில் உள்ள மதுபாட்டில்களை நான் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 418/2025** |
| Deposition of witness for | :: | **PW. 1** |
| Name | :: | **பாஸ்கரன்** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**

**02.06.2026**

**முதல் விசாரணை**:

1. நான் பந்தல்குடியில் குடியிருந்து ஜவுளி வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை நான் பார்த்தது இல்லை, தற்போது தான் முதன்முறையாக நீதிமன்றத்தில் வைத்து பார்க்கிறேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் அத்தாட்சி ஆவணத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். மேற்படி கையெழுத்தை சுமார் 10 மாதங்களுக்கு முன்பு நான் வியாபராத்திற்காக பந்தல்குடி சாலையில் சென்று கொண்டிருந்தபோது போலீசார் ஒருவர் கேட்டு கொண்டதற்கு இணங்க செய்து கொடுத்தேன். நான் கையெழுத்து செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. என்முன்பாக எந்தவொரு பொருட்களும் எதிரியிடமிருந்து கைப்பற்றப்படவில்லை. **( அத்தாட்சியில் உள்ள கையெழுத்து அசாஆ .1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பிறழ்சாட்சி என அறிவிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி**

**வழங்கப்படுகிறது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. கடந்த 24.08.2025ம் தேதி 12.50 மணியளவில் நானும், எனக்கு தெரிந்த சிவசங்கநடராஜ என்பவரும் வியாபாரம் சம்மந்தமாக பந்தல்குடி பரமேஸ்வரி மில் பணியாளர்கள் குடியிருப்பு முன்பாக ரோட்டில் சென்று கொண்டிருந்தபோது பந்தல்குடி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் மதுபாட்டில்கள் விற்றது சம்மந்தமாக அய்யம்பிள்ளை என்பவரை கைது செய்து அவர் வைத்திருந்த சாக்குபையில் இருந்த சுமார் 180 மிலி அளவுள்ள EXPRESS Brandy – 18 மற்றும் 180 மிலி அளவுள்ள MONITOR Brandy bottle –16. 180 மிலி அளவுள்ள GOLDEN CHOICE Brandy bottle –2 ஆக மொத்தம் 31 பாட்டில்களை அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றியதாகவும் அதற்கு நானும், சிவசங்கரநடராஜ் என்பவரும் சாட்சியாக இருந்து கையெழுத்து செய்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**இல்லை**